Over Bridge at Palakarai

* 276. Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to construct a bridge at Palakarai in Tiruchirappalli district; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: திருச்சிராப்பள்ளி நகராட்சி எல்லைக்குள், பாலக்கரை அருகில், 45 எண் தேசீய நெடுஞ்சாலையின் 197/6 மைலில் இருப்புப்பாதை—சாலை கடவிற்குப்பதிலாக மேம்பாலம் கட்டுவதற்கு ரூ. 46.00 லட்சம் மதிப்பீட்டுக்கு, 1971 ஆகஸ்டில் அரசாங்கம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

திரு. கு. காமராட்சி: அந்தப் பாலம் கட்டப்படுகிறபோது பாதிக்கப்படுகிற சிறிய வியாபாரிகளுக்கு அந்தப் பாலத்தின் அடியில் கடைகள் அமைத்து குறைந்த வாடகையில் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அப்படி ஒரு செயற்குறிப்பு இல்லை.

Buildings for Public Works Department

* 277. Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to put up new buildings for the Public Works Department in Madras City; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம். சேப்பாக்கத்தில் ரூபாய் ஐந்து லட்சத்து ஐம்பதினாயிரம் செலவில், பரீட்சார்த்தமாக இரண்டு மாடிக் கட்டிடம் கட்ட கருத்து உள்ளது.

(இ) இக்கட்டிடம் கட்ட ஆகும் மொத்த தொகையில் 75 சதவீதத்தை தேசிய கட்டிட நிறுவனத்திடமிருந்து மானியமாகப்பெற்று அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடமானது, ஆராய்ச்சி புத்தறிவில் ஈடுபடும் கட்டிட மையக் கோட்டத்தின் எல்லாவித தேவைகளையும் பூர்த்தி செய்யும். மேலும் இக்கட்டிடமானது ஆராய்ச்சிக் கூடங்கள், தொழில் நுட்ப நூலகம் முதலியவற்றுக்கும் கட்டிட மையக் கோட்டத்தின் அலுவலகமும் அமைவதற்கு போதுமான இடவசதியுள்ளதாயுமிருக்கும்.

Accident at Adyar Bridge Workspot

* 278. *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that the Pile Driving Machine at Adyar Bridge in Madras collapsed about the 10th July 1972 causing injuries to workers; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) 10—7—1972 அன்று 3-வது கண் மையப்பகுதியைத் தோண்டுங்காலத்து தோண்டுகருவியை மேல் நோக்கி இழுக்கும் போது அக்கருவியில் பிணைக்கப் பட்டிருந்த இரும்பு இழுகயிறானது சரியான முறையில் இயங்கத் தவறியதால் கீழே விழலாயிற்று. அப்போது காண்ட்ராக்டரின் வேலையாட்கள் நால்வர் காயமடைந்தனர். அவர்கள் உடனே சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப் பப்பட்டனர். அவர்கள் சிகிச்சைக்குப்பின் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப் பட்டனர்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: காயம் அடைந்த தொழிலாளர்களுக்கு ஏதேனும் இழப்பீடு வழங்கப்பட்டிருக்கிறதா? அப்படியானால் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: காயம் பட்ட தொழிலாளர் களுக்கு இழப்பீடு கொடுக்கவேண்டுமென்றால் காண்டிராக்டர்தான் கொடுக்க வேண்டும். அதைப்பற்றிய விவரம் என்னிடம் இல்லை.

Production of Cavendish variety of banana

* 279. *Q.*—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the names of areas in Tamil Nadu where large quantity of Cavendish variety of banana are grown at present; and

(*b*) whether there is any proposal to intensify its growth?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) கோயம்புத்தூர் மாவட்டம், மதுரை மாவட்டம் (கம்பம் பகுதி), திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடி, தென்காசி ஆகிய பகுதிகள், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குளித்தலை, திருவ் ணாரயபுரம், அந்தநல்லூர், வயலூர், தொட்டியம் ஆகிய வட்டாரங்கள்,